EN/04/September–October/2023

# பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்

மெட்ரோபாலிடன் அலுவலகம், சினாட் செக்ரடேரியட், செயின்ட் தாமஸ் கம்யுனிடி, திருவல்லா, கேரளா, இந்தியா.

# மேய்ப்பனின் கடிதம்

**செப்டம்பர் /அக்டோபர் 2023**

அனைத்து ஆர்ச் பேராயர்கள், பிஷப்கள், குருமார்கள் மற்றும் டீக்கன்கள், நற்செய்தியாளர்கள் மற்றும் ஆர்டர் ஆப் சிஸ்டேர்ஸ், உலகெங்கிலும் உள்ள நமது பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்சின் விசுவாச மக்கள் யாவருக்கும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தில் ஆசீர்வாதங்களும் வாழ்த்துக்களும் உண்டாவதாக. ஆமென்!

இந்த மறுரூப பண்டிகையின் காலங்களில், நாம் மேலும் மேலும் தேவனுடைய தெய்வீக சுபாவத்திற்கு மாற்றப்பட வேண்டும், இது தான் நம்முடைய ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ வாழ்க்கையின் குறிக்கோள் என்று நினைவூட்டப்படுகின்றோம். (2 கொரி. 3:18), இது நடைபெற, மனந்திரும்புதல் அவசியமாகும். இந்த மாதம், மனந்திரும்புதலுக்கான சில அம்சங்களைக் கொஞ்சம் கவனமாகப் பார்ப்போம்.

## 1.மனந்திரும்புதல் தொடர்கிறது.

திருச்சபையின் பிரசித்தமான பரிசுத்தவான் கூறியது போல், 'வாழ்வதற்கு இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன: ஒன்று நாம் பாவம் செய்யாமலிருப்பது அல்லது நாம் பாவம் செய்தால், நாம் மனந்திரும்பிவிட வேண்டியது. இதுவே இரட்சிப்புக்கான ஒரே வழி.'

மேலும் நாம் எல்லோருமே பாவம் செய்யாமலிருக்க திறனற்றவர்கள் என்பதால், நாம் ஒவ்வொருவரும் தொடர்ந்து மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்புதலுக்கு, நம்முடைய பழைய வழிகளை விட்டுவிட்டு கிறிஸ்துவின் வழிகளைப் பின்பற்றுவதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும், பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்துவதற்கு ஏற்றார் போல தேவையான மாற்றத்தை அடைய முற்படவேண்டும். அதனால்தான் ஆதிகால திருச்சபையின் பிதாக்கள் "ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, தேவனுடைய குமாரனே, பாவியாகிய என்மேல் இரக்கமாயிரும்" என்ற இயேசு ஜெபத்தை திரும்பத் திரும்பச் சொன்னார்கள். நாம் அவ்வாறு செய்யும்போது, தேவன் நம்மைச் சுத்திகரிப்பதன் மூலம் பதிலளிக்கிறார். இது எவ்வாறு செயல்படுகிறது என்பதை பரிசுத்த யோவான் விளக்குகிறார்: "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச்

சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்". 1**(யோவான் 1: 9)**

**2.நேர்மையற்ற மனந்திரும்புதலை நிறுத்துங்கள்.**

பரிசுத்த யோவான் ஸ்நானகன் காலத்தில், பக்தியுள்ள யூதர்கள் தங்கள் இரட்சிப்பு மற்றும் நித்திய பாதுகாப்பு, தாங்கள் ஆபிரகாமின் வழித்தோன்றல் எனபதினால் கிடைக்கும் என்று நம்பியிருந்தனர். ஆகவே, அவர்களின் மனந்திரும்புதல் பெரும்பாலும் உண்மையற்றதாக இருந்தது, இதன் விளைவாக அவர்களின் வாழ்க்கையில் எதுவும் மாறவில்லை. பரிசுத்த யோவான் ஸ்நானகன் அந்த இஸ்ரவேலர்களுக்கு ஒரு செய்தியை சொன்னார்:

"மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள், ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லத்தொடங்காதிருங்கள், தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." (பரி.லூக்கா 3:8)

சில சமயங்களில், கடந்த கால ஆவிக்குரிய அனுபவத்தின் சாக்குப்போக்கைப் பயன்படுத்துகிறோம், தொடர்ச்சியான மனந்திரும்புதலின் முக்கியத்துவத்தைப் புறக்கணிக்கிறோம், மேலும் நம்மில் இருக்கும் கிறிஸ்துவற்ற நடத்தைகளுக்கு குருடர்களாக இருக்கிறோம். இதன் விளைவாக, நம் வாழ்வின் பல பகுதிகளில் ஆவிக்குரிய ரீதியில் வளரத் தவறுகிறோம்; நமக்கான தேவனின் திட்டங்கள் நிறைவேறுவதில்லை; தேவன் நமக்கு கொடுக்க விரும்பும் பல வெகுமதிகளை நாம் இழக்கிறோம்; இந்த உலகில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நாம் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய விதத்தில் நாம் தவறிவிடுகிறோம்.

**3. உண்மையான மனந்திரும்புதல்:**

**"பழைய வழிகள் " கிறிஸ்துவின் வாழ்க்கையின் மூலம் மாற்றப்படுத்தல்**

கிறிஸ்துவ சுபாவங்களுக்கு பதிலாக வதந்தி, பொறாமை, சோம்பேறித்தனம், குறைகூறுதல், மற்றவர்களைக் குறைகூறுதல், நேர்மையின்மை, கீழ்ப்படியாமை, ஒழுக்கக்கேடு, மன்னிப்பின்மை, சுயநலம், கீழ்ப்படிதல் இல்லாமை, கிளர்ச்சி, பேராசை, பழிவாங்குதல் அல்லது மாய்மாலம்?. ஒருவேளை உங்களுடைய "பழைய வழிகள்" இந்தப் பட்டியலில் இல்லையென்றாலும், அவை என்னவென்று உங்களுக்குத் தெரியும்.

உண்மையாக மனந்திரும்பி, இந்த கிறிஸ்துவுக்கு எதிரான வழிகளை நீக்கிவிட்டு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைத் தரித்துக்கொள்ள முடிவு செய்யுங்கள், பரிசுத்த பவுல் எழுதியது போல, ஆகையால் அந்தகார கிரியைகளை தள்ளிவிட்டு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரித்துகொள்ளுவோம். முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு,

மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள் (ரோமர் 13:12, 14; எபேசியர் 4 :22, 24).

கிறிஸ்துவில் எனக்கு அருமையான பிள்ளைகளே, இரட்சிப்பு என்பது தினசரி செயல்முறை என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடவேண்டாம், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். (பிலி 2:12)

இந்தியாவின் மணிப்பூரில் உள்ள நமது சகோதர சகோதரிகளுக்காக - பாதுகாப்பும் அமைதியும் திரும்பி வர தொடர்ந்து ஜெபிப்போம்.

சர்வ வல்லமை உள்ள தேவனுடைய கிருபையும் சமாதானமும் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக ஆமென்!

பரிசுத்த திருச்சபையின் சேவையில்,

கிறிஸ்துவில் உங்கள் தந்தை,

**தேதி:** 18 ஆகஸ்ட் 2023

**இடம்:** பரிசுத்த சினாட்

**அத்தனேசியஸ் யோஹான் I மெட்ரோபொலிட்டன்.**